தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, பங்குனி 5, திருவள்ளுவர் ஆண்டு—2051

2020 மார்ச் 18, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு."

பயம் இல்லாதிருத்தல், ஏழைக்குக் கொடுக்கும் கொடை, சிறந்த அறிவு, மிகுந்த ஊக்கம் இந்த நான்கினையும் குறை இல்லாமல் நிறைவாகப் பெற்றிருப்பவர் சிறந்த ஆட்சியாளர் ஆவார்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

116—

நடைபயிற்சிப் பாதை

***21007—திரு. V.T. கலைச்செல்வன்**:

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தைத் தரம் உயர்த்தி, நடைபயிற்சிப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2020 மார்ச் 18

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்திற்குட்பட்ட விளையாட்டு மைதானத்தை தரம் உயர்த்தி, நடைபாதை அமைப்பது குறித்த சாத்தியக்கூறுகள் இருக்குமேயானால், அரசு இதுபற்றி ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆத்மாவை வணங்கி, 12,524 கிராம ஊராட்சிகளிலும், 528 பேரூராட்சிகளிலும், அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம் தந்த மாண்புமிகு தமிழ்நாடு நிரந்தர முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாகச் செயல்படும் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் திரு. O.P.S. அவர்களையும் வணங்குகிறேன்.

விருத்தாசலம் நகரில் அமைந்துள்ள mini ஸ்டேடியத்தில் கால்பந்து புல் தரை விளையாட்டு மைதானம் அமைத்துத் தரவேண்டுமெனவும், அதிலே 400 மீட்டர் ஓடுபாதையை புதிதாக அமைத்துத் தரவேண்டுமெனவும், மேலும் அங்கே நிறைய இடங்கள் இருப்பதால், அதன் உள் பகுதியில் கைப்பந்து விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, அங்கே தங்கி பயிற்சி பெறுகிற விளையாட்டு வீரர்களுக்கு ஏதுவாக, தங்கும் விடுதி மற்றும் கழிவறைகளையும் கட்டித் தந்து, கால்பந்து academy–சிறப்புப் பயிற்சி நிலையத்தை அந்த விளையாட்டு மைதானத்தில் அமைத்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைத்தான் சிந்தித்து வருகிறார்கள். மனிதனைப் பொறுத்தவரையிலும் உண்ணும் உணவு, எண்ணும் எண்ணம்,

2020 மார்ச் 18]

உடற்பயிற்சி இம்மூன்றும் ஒருங்கிணைந்தால்தான் நீண்ட காலம் உயிரோடு வாழ முடியும் என்பதை உணர்ந்து, விளையாட்டுத் துறையை ஊக்கப்படுத்துவதற்காக இந்த அரசு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நம்முடைய உறுப்பினர் அவர்கள் சில கோரிக்கைகளை இங்கே குறிப்பிட்டார்கள். அங்கே நடைபாதை 150 மீட்டர் நீளத்தில் இருக்கிறது. இந்த நிலையில், அங்கே 2 மீட்டர் அகலத்தில் நடைபாதை அமைப்பதற்கும், அந்த விளையாட்டு மைதானத்தில் மாணவர்களுக்குத் தடகளப் பயிற்சி அளிப்பதற்கும், அங்கே தங்கி பயிற்சி பெறும் மாணவர்களுக்கு கழிப்பிட வசதி ஏற்படுத்தித் தருவதற்கும் அரசு பரிசீலித்து வருகிறது. ஆகையினால், இந்த வசதிகள் அனைத்தையும், அங்கே அருகில் இருக்கிற ஏதேனும் ஒரு நிறுவனத்தின் CSR fund மூலமாகவே நிறைவேற்றுவதற்கு அரசு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9–வது ஆசிய விளையாட்டுப் போட்டியை உலகம் வியக்கும் வகையிலே தமிழ்நாட்டிலே நடத்திக் காட்டிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. அந்த வகையிலே, இளைஞர்களை ஊக்குவிக்கிற வகையில், அம்மா அவர்களின் பாதையிலே மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். விருத்தாசலத்திலே அமைந்திருக்கிற அந்த mini ஸ்டேடியத்தில் விளையாடுகிற நாங்களெல்லாம், கைப்பந்து விளையாட வேண்டுமென்று சொன்னால், சுமார் 125 கிலோ மீட்டர் பயணம் செய்து, திருச்சியிலே இருக்கிற Sports Hostel–க்குத்தான் செல்லவேண்டியிருக்கிறது. கடலூர் மாவட்டத்திலும், விழுப்புரம் மாவட்டத்திலும் அந்த வசதி இல்லாமல் இருக்கிற காரணத்தினால், கைப்பந்து விளையாட்டுப் பயிற்சியாளரை நியமித்து, தங்கும் விடுதியை அந்த விளையாட்டு mini ஸ்டேடியத்திலே இந்த ஆண்டே துவக்குவதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2020 மார்ச் 18

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்பந்து விளையாட்டுப் பயிற்சியாளர் திரு. அறிவழகன் என்பவர் அங்கே நியமிக்கப்பட்டு, அந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கைப்பந்து விளையாட்டைப் பொறுத்தவரையில், அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். ஏனென்று சொன்னால், இந்திய நாட்டின் வரலாற்றில் தமிழகத்திலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) கிராமங்களில் இருக்கின்ற மக்களுடைய நலன் கருதி, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், 12,524 ஊராட்சிகளிலும், 528 பேரூராட்சிகளிலும் இளைஞர்களைக் கவருகின்றவகையில், இளைஞர்களுக்கு வலிமையூட்டுகின்றவகையிலும் விளையாட்டு அரங்கங்களை அமைப்பதற்காக நிதியை வழங்கியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டிலேதான் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டங்களை அறிவித்து, ‘அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்’ என்ற ஒரு பெயரையும் சூட்டி, ஒரு வரலாறு படைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையை, நம்முடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில், இளைஞர்களின் விளையாட்டு மேம்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கு மாரத்தான் போட்டிகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படி மாரத்தான் போட்டிகள் நடத்தப்படுகின்ற எல்லா நாடுகளிலும், அந்தந்த நகரின் மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைச் சுற்றியே மாரத்தான் போட்டிகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், அன்றைய விளையாட்டுத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. மைதீன்கான் அவர்கள், மெரினா கடற்கரையிலே ஏராளமான மாரத்தான் போட்டிகளை நடத்தியிருக்கிறார்கள். ஆனால், 2017 ஜல்லிக்கட்டு போராட்டத்திற்குப் பிறகு, மெரினா கடற்கரையில் மாரத்தான் போட்டிகள் நடத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

2020 மார்ச் 18]

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் மாரத்தான் போட்டிகளில் பங்கேற்க சென்னைக்கு வருபவர்கள், இந்தியாவின் மிக நீண்ட 13 கிலோ மீட்டர் நீளமுடைய மணல் பரப்புள்ள கடற்கரையின் அழகைக் கண்டு ரசிப்பதற்கு ஏதுவாக, அந்த மெரினா கடற்கரையில் மாரத்தான் போட்டிகளை எதிர்காலத்தில் நடத்துவதற்கு, விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பட்டினப்பாக்கம் பகுதியிலேதான் மாரத்தான் ஓட்டங்களுக்கு பயிற்சியளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மெரினா Beach–ஐ பொறுத்தவரையில், ஜல்லிக்கட்டுப் போராட்டம் நடைபெற்றபோது உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில், நம்முடைய காவல் துறையினருடைய அனுமதியைப் பெற்றுத்தான் எதுவுமே நடத்தப்பட வேண்டுமென்கின்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உங்களுடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதியில், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திலுள்ள கீரப்பாக்கம் மற்றும் ஆப்பூர் ஊராட்சிகளிலுள்ள நடுநிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்தித் தர வேண்டும். இந்த இரண்டு பள்ளிகளுக்கும் அதற்கான தொகைகள் கட்டப்பட்டு, கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் ஆகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டாவது, இந்த இரண்டு பள்ளிகளையும் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[2020 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பள்ளிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திலுள்ள ஒரு பள்ளியையும், மற்றொரு நடுநிலைப் பள்ளியையும், உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இந்த இரண்டு பள்ளிகளில், ஏதாவது ஒரு பள்ளியைத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று நீங்கள் கடிதம்மூலம் கோரிக்கை வைத்தீர்களேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அது நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

புதிய மின்மாற்றி

***37578—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, கந்தன்சாவடி சந்தியப்பன் சாலை பகுதியில் பழுதடைந்துள்ள மின்மாற்றிக்கு மாற்றாக புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கந்தன்சாவடி, சந்தியப்பன் சாலையில் மின்மாற்றி பழுதடைந்திருக்கின்றது என்றும், அதை மாற்றித் தர